1970 மார்ச் 24]

தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென்ற அரசாங்க உத்தரவு ஜி. ஓ. 3030-ம் எண் 2—12—1969-ம் தேதியுள்ளதில் இந்தக் கட்டண விகிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காலதேசவர்த்தமானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

கோடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அஞ்சல் பைகள் தனியார் பஸ்களில் வருவதை மாற்றி, அரசாங்க பஸ்களில்தான் வரவேண்டும் என்று செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அஞ்சலகத்தைத் தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய வேலையாகும்.

விருதுநகரில் அரசு போக்குவரத்து பணிமனை.

*526 வினா.—திரு. பெ. சீனிவாசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் அரசாங்க பேருந்துகளை பழுது பார்க்க புதிய பணிமனை கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) அதற்குரிய நிலம் வாங்க ஏற்பாடு செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இப்படிப்பட்ட பணிமனைகள் வேறு எந்த எந்த இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன ? பாளையங்கோட்டையில் ஒன்று கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறதே, அதன் திறப்பு விழாவுக்கு அமைச்சர் அவர்கள் வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திறப்பு விழாவுக்கு அழைப்பு அனுப்பினால் வருவதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : விருதுநகரில் கட்டப்பட இருக்கிற பணிமனை எப்போது துவங்கும் ? எப்போது முடிக்கப்படும் ? எத்தனை பேருந்துகள் பழுது பார்க்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 75 ஏக்கரா நிலம் அக்வயர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

மதுரையில் போக்குவரத்துத்துறை பணியாளர் வேலை நிறுத்தம்.

*527 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் போக்குவரத்துத்துறைப் பணியாளர்கள் 1969 ஜூலை 17-ஆம் நாள் அளவில் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

[1970 மார்ச் 24

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மதுரையிலுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து துறைப் பணியாளர்கள் 1969 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாளன்று காலை வண்டிகளை எடுக்க மறுத்தனர். அன்று பகல் 11-15 மணியளவில் போக்குவரத்துப் பணி மீண்டும் தொடங்கியது.

(இ) விருதுநகர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரின் தூண்டுதலால் நால்வர் விருதுநகரிலுள்ள காலம் குறிப்போர் ( ) ஒருவரை 17—7-1969 அன்று இரவு தாக்கிய காரணத் மதுரை வட்டாரப் பணியாளர்கள் பரபரப்படைந்தனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த அரசு போக்குவரத்துத்துறை பணியாளர்கள் தங்களது குறைந்தபட்ச கோரிக்கையைக் கூட அரசாங்கம் ஏற்கவில்லை என்ற காரணம் காட்டி அரசாங்கத்திற்கு ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களா ? ஆம் எனில் எந்தத் தேதி ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிப்பட்ட குறிப்பு இங்கே இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மதுரையில் இருந்து விருதுநகருக்குச் செல்ல இருந்த பஸ் ஒன்றில் ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட இடம் ஒன்றை போலீஸ் துறையாளர் ஒருவருக்குக் கொடுக்கச் சொல்ல, அதற்குச் சம்மதிக்காத காரணத்தினால் சப்-இஸ்பெக்டர் மருதையா என்பவர் செக்கிங் இஸ்பெக்டரை அடித்ததாகப் புகார் சொல்லப்பட்டதே, அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தக் காரணம் காட்டிதான் போக்குவரத்துத்துறை பணியாளர்கள் பஸ்களை எடுக்க மறுத்தனர். அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சாதாரண சிறு விஷயங்கள் நடந்தாலும் கூட உடனடியாக அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும், இடைஞ்சல் ஏற்படக்கூடிய வகையில் வேலைநிறுத்தல் ஒரு வியாதியாகப் பரவிக்கொண்டிருக்கிறதே, அதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வியாதிக்கு நல்ல மருந்து கொடுத்தால் தீர்ந்துவிடும்.

தெற்கு மாங்குடியிலுள்ள ஒன்றியப்பள்ளி கட்டடம்

*528 வினா—**திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தெற்கு மாங்குடி பஞ்சாயத்தில், யூனியன் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு எந்த தேதியில், யூனியனில் தீர்மானம் போடப்பட்டது ?